**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR QUARRYING PROPOSAL OVER AN EXTENT OF 1.31.0 HA - M/S.S.KRISHNASAMY ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F.NO.11/2B1, 11/2B2 & 14/2 OF KOTTAIYUR VILLAGE, VIRUDHUNAGAR TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 23.12.2025, 11.00 AM AT M/S. V.O.C KALYANA MAHAL, AVUDAYAPURAM VILLAGE, VIRUDHUNAGAR TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S.K.Kanagaraj | : | Revenue Divisional Officer,<br>Sattur,<br>Virudhunagar District. |
| 2 | Er. J. Hamoneth Joesun | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | Er.K.Keerthy | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| | As per Attendance Register | : | Government Officials, Public and Project proponent 126 Nos (List enclosed). |

The public hearing was held on 23.12.2025 at 11.00AM at M/s.V.O.C Kalyana Mahal, Avudayapuram Village, Virudhunagar Taluk, Virudhunagar District under EIA Notifications, 2006 for the Quarry proposal over an extent of 1.31.0 Ha - M/s.S.Krishnasamy Rough Stone and Gravel Quarry, S.F.No.11/2B1, 11/2B2 & 14/2 of Kottaiyur Village, Virudhunagar Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other Government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinamalar" and "The New Indian Express" on 08.11.2025. He also informed that wide publicity was given 19.12.2025 about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently,

the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written statements would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu to Consider the issue of Environmental Clearance to the proposed project.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. Subsequently, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.S.Krishnasamy Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

Further, the public has furnished their views with respect to the project as follows –

1. **Thiru. Ramachandran, Kuppampatti Village**

Thiru. Ramachandran stated that the establishment of this quarry would provide employment opportunities, both directly and indirectly, to about 20 to 50 persons, and hence he welcomed this project.

2. **Thiru. Murugesan, Avadaiyapuram Village**

Thiru. Murugesan stated that their village receives water through borewells sourced from the Mannarkottai tank, and requested that proper measures be ensured so that the operation of this quarry does not lead to water scarcity in their village, and concluded his speech accordingly.

3. **Thiru. Senbagaraja, Kalaperumalpatti Village**

Thiru. Senbagaraja stated that there would be no adverse impact due to this quarry and that on behalf of the people of their village, there is no objection to communication of the quarry.

4. **Thiru. Desinguraja, Kottaiyur Village**

Thiru. Desinguraja stated that with the establishment of this quarry, raw materials required for house construction would be easily available to them, and therefore requested that permission be granted for this quarry.

5. **Thiru. Ramar, Kottaiyur Village**

Thiru. Ramar stated that the proposed quarry site is located is an area where quarries are already in operation and that no adverse impact would arise due to the establishment of this quarry. He further stated that the quarry would provide both direct and indirect employment opportunities and that there would be no impact on groundwater. He also mentioned that the quarry owner would supply construction materials at a concessional rate, and accordingly he welcomed the project.

6. **Thiru. Saravanan, Kottaiyur Village**

Thiru. Saravanan stated that the establishment of this quarry would provide employment opportunities and that there would be no adverse impact, and concluded his speech.

7. **Tmt. Jebakkani, Ramanathapuram**

Tmt. Jebakkani stated that the proposed quarry would improve the livelihoods of the people and that the proponent provides basic amenities such as educational facilities, water supply, and medical facilities to the public, and also they are planting and maintaining the trees for environmental protection. Stating the above, she expressed her support for the project.

**8. Thiru. Muneeswaran, Tirupati**

Thiru. Muneeswaran stated that the establishment of this proposed quarry would provide employment opportunities to the people residing in nearby villages, that raw materials required for house construction would be easily available at affordable cost, and further stated that the establishment of this quarry would not cause air pollution or any adverse impact on agricultural lands, and accordingly expressed his support for the project.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their furthermore views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and informed that the Minutes of the Meeting along with Compact Disc consisting the entire videographed Public Hearing will be forwarded to the SEIAA for further actions. He also thanked all and requested to furnish their views if any in written of petitions.

Total number of written petitions received - 13

With this, the meeting came to the end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar.

Revenue Divisional Officer,
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 10 – pages, 126 persons).
2. Videograph of public hearing meeting (CD format).
3. Copy of Public Notices (Both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கோட்டையூர் கிராமம், புல எண். 11/2B1, 11/2B2 & 14/2 - ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.S.கிருஷ்ணசாமி உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 23.12.2025 முற்பகல் 11.00 மணியளவில் தி/ள். வ.உ.சி. கல்யாண மஹால், ஆவுடையாபுரம் கிராமம், விருதுநகர் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.சு.க.கனகராஜ் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி.ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 4 | பொறி.க.கீர்த்தி | : | உதவிப் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| | வருகை பதிவேட்டின் படி | : | அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 126 நபர்கள். (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது). |

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கோட்டையூர் கிராமம், புல எண்கள்.11/2B1, 11/2B2 & 14/2 -ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.S. கிருஷ்ணசாமி உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டம் தி/ள். வ.உ.சி. கல்யாண மஹால், ஆவுடையாபுரம் கிராமம், விருதுநகர் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 23.12.2025 முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினமலர்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆகிய நாளிதழ்களில் 08.11.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக் காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம், நடத்துவது தொடர்பாக

பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் 19.12.2025 அன்று விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக் கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனவும் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துகேட்புக் கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு மேற்படி குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்கும் பொருட்டு அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக் கொண்டு, அதன் பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன் பின் தி/ள்.S.கிருஷ்ணசாமி உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய் மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

**<u>1.திரு.ராமச்சந்திரன், குப்பாம்பட்டி கிராமம்</u>**

திரு.ராமசந்திரன் அவர்கள், இக்குவாரி அமைவதினால் நேரடியாகவும், மறைமுகமாகவும் 20 முதல் 50 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறி இத்திட்டத்தை வரவேற்றார்.

**2. திரு.முருகேசன், ஆவடையாபுரம் கிராமம்**

திரு.முருகேசன் அவர்கள், எங்கள் கிராமத்திற்கு மன்னார்கோட்டை கண்மாயில் இருந்துதான் ஆழ்துளை கிணறு மூலம் தண்ணீர் கிடைப்பதாகவும், இக்குவாரியின் செயல்பாட்டினால் எங்கள் கிராமத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படா வண்ணம் ஆவணம் செய்யுமாறு கேட்டுக்கொண்டு தனது உரையை முடித்துக்கொண்டார்.

**3.திரு.செண்பகராஜா, காளப்பெருமாள்பட்டி கிராமம்**

திரு.செண்பகராஜா அவர்கள், இக்குவாரியினால் எந்த பாதிப்பும் இல்லை எனவும், இக்குவாரி தொடங்குவதால் எனது சார்பாகவும், எங்கள் கிராம மக்கள் சார்பாகவும் எந்த ஆட்சேபனையும் இல்லை எனக் கூறினார்.

**4. திரு.தேசிங்குராஜா, கோட்டையூர் கிராமம்**

திரு.தேசிங்குராஜா அவர்கள், இக்குவாரி அமையவிருப்பதால் எங்களுக்கு வீடு கட்டுவதற்கான மூலப்பொருட்கள் எளிதில் கிடைக்கும் எனவும், ஆகையால் இக்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கூறினார்.

**5.திரு.ராமர், கோட்டையூர் கிராமம்**

இக்குவாரி அமையவிருக்கும் இடமானது ஏற்கனவே குவாரிகள் செயல்பட்டு கொண்டிருக்கின்ற இடம் எனவும், இக்குவாரி அமைவதினால் எந்த பாதிப்பும் வராது என்றும், இக்குவாரி வருவதினால் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும், மேலும், நிலத்தடி நீருக்கு எந்த பாதிப்பும் இல்லை எனவும் கூறினார். மேலும், குவாரி உரிமையாளர் வீடு கட்டுவதற்கான பொருட்களை மலிவான விலையில் வழங்குவதாகவும் கூறி இத்திட்டத்தை வரவேற்றார்.

**6.திரு.சரவணன், கோட்டையூர் கிராமம்**

இக்குவாரி அமைவதினால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், பாதிப்பு ஏதும் இல்லை எனவும் கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

**7.திருமதி.ஜெபக்கனி, இராமநாதபுரம்**

திருமதி.ஜெபக்கனி அவர்கள், இக்கல்குவாரியினால் மக்களின் வாழ்வாதாரங்கள் மேம்படும் என்றும், மக்களுக்கு அடிப்படை வசதியான கல்வி வசதி, தண்ணீர் வசதி மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கின்றனர் என்றும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும்

வகையில் மரங்கள் வைத்து பராமரிக்கின்றனர் கூறி இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவிப்பதாக கூறினார்.

**8. திரு.முனீஸ்வரன், திருப்பதி**

திரு.முனீஸ்வரன் அவர்கள், இக்கல்குவாரி அமைவதினால் அருகிலுள்ள கிராமங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் எனவும், வீடு கட்டுவதற்கான மூலப்பொருட்கள் மலிவு விலையில் எளிதில் கிடைக்கும் என்றும், மேலும் இக்குவாரி அமைவதினால் காற்று மாசுபாடு மற்றும் விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏதும் இல்லை என்று கூறி தனது ஆதரவை தெரிவித்தார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறுயாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ அடங்கிய குறுந்தகடு மற்றும் எழுத்துபூர்வமான கூட்ட நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு பரிசீலினை செய்யும் பொருட்டு அனுப்பிவைக்கப்படும் எனவும், மற்றும் எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை - 13

அத்துடன்பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர் மாவட்டம்.

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப் பதிவேடு நகல் (மொத்தம் - 10 பக்கங்கள்,126 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).